ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

# மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

**15.08.2022**

தலைப்புச்செய்திகள்

1. நாட்டின் 76ஆவது சுதந்திர தினம் உற்சாகத்துடனும் கோலாகலத்துடனும் இன்று கொண்டாடப்படுகிறது.

2. பிரதமர் திரு.நரேந்திரமோதி புதுதில்லி செங்கோட்டையில் தேசிய கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

அடுத்த 25 ஆண்டுகளுக்கான இலக்கை நிர்ணயித்து இளைஞர்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்க பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

3. சென்னை கோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தேசிய கொடியை இன்று ஏற்றிவைத்தார்.

விடுதலை போராட்ட வீரர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தார்.

4. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சுதந்திர தின விழா இன்று வண்ணமயமாகவும் தேசப்பற்றுடனும் கொண்டாடப்பட்டது.

இனி விரிவான செய்திகள்

**********

பிரதமர் - சுதந்திர தினம்

நாட்டின் 76ஆவது சுதந்திர தின விழா இன்று உற்சாகத்துடனும் கோலாகலத்துடனும் கொண்டாடப்படுகிறது.

**Music**

பிரதமர் திரு.நரேந்திரமோதி புதுதில்லி செங்கோட்டையில் தேசிய கொடியை ஏற்றிவைத்து சுதந்திர தின விழாவை இனிதே துவக்கிவைத்தார்.

Music

கொடிகம்பத்தில் தேசிய கொடி பறந்தபோது விமான படையின் 20 பேர் கொண்ட வாத்திய குழுவினர் தேசிய கீதத்தை இசைத்து மூவர்ண கொடிக்கு வணக்கம் செலுத்தினர்.

இதனை தொடர்ந்து தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தும் வகையில் 21 துப்பாக்கி குண்டுகள் முழங்கின.

Music

தேசிய கொடி ஏற்றப்பட்ட பின்னர் வானிலிருந்து ஹெலிகாப்டர்கள் மூலம் மூவர்ண கொடி மீது வண்ணமலர்கள் தூவப்பட்டன.

அதனை தொடர்ந்து முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையை பிரதமர் ஏற்றுக்கொண்டார்.

Music

தொடர்ந்து செங்கோட்டையிலிருந்து நாட்டு மக்களிடையே சுதந்திர தின உரையாற்றிய பிரதமர் இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகத்தின் அனைத்து பகுதியிலும் தேசிய கொடி பெருமையுடன் பட்டொளிவீசி பறப்பதாக குறிப்பிட்டார்.

புதிய தீர்மானத்துடன் நாடுமுன்னெடுத்து செல்வதற்கான வரலாற்று சிறப்பு மிக்க தினம் இது என்று பிரதமர் கூறினார்.

தேசப்பிரதா மகாத்மா காந்தியடிகள், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் உள்ளிட்டோரை நன்றியுடன் நினைவு கூறுவதாக கூறிய பிரதமர் விடுதலை போராட்ட வீரர்கள் அனைவருக்கும் நாடு இன்று அஞ்சலி செலுத்துவதாக குறிப்பிட்டார்.

ஆஸாதிகா அம்ரித் மகோத்சவ் கொண்டாடப்படும் இத்தருணத்தில் விடுதலை போராட்ட வீரர்களின் கனவுகள் மெய்பட வேண்டும் என்று கூறினார்.

ஆங்கிலேயேர் ஆட்சியின் அடித்தளத்தை அசைத்த பகத்சிங், ராஜகுரு, ராணி லட்சுமிபாய் உள்ளிட்ட வீரர்களுக்கு நன்றி தெரிவிப்பதாக கூறினார்.

வாய்ஸ்

சுதந்திர இந்தியாவின் கட்டமைப்பு சிற்பிகளான ஜவஹர்லால் நேரு, ராம்மனோகர் லோஹியா, சர்தார் வல்லபாய் பட்டேல் உள்ளிட்டோரையும் தலைவணங்குவதாக குறிப்பிட்டார்.

ஜனநாயகத்தின் தாயான இந்தியா பல சவால்களை கடந்து முன்னேறி வந்திருப்பதாக கூறிய அவர் இந்தியாவின் பன்முக தன்மையிலிருந்து மக்கள் வலிமை பெற்றிருப்பதாகவும், அனைத்து மக்களையும் இணைக்கும் தேசப்பற்று என்ற பொதுநூல் நாட்டை ஒருங்கிணைத்திருப்பதாகவும் கூறினார்.

புதிய இந்தியாவின் வளர்ச்சிக்கு உள்ளடக்கிய மேம்பாட்டின் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

நாட்டு மக்களுக்கு தாய்நாட்டின் மீதான பற்று இல்லந்தோறும் தேசிய கொடி இயக்கத்தின் வாயிலாக சிறப்பாக வெளிப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

நாடு 75 சுதந்திர ஆண்டுகளை நிறைவுசெய்துள்ள இத்தருணத்தில் அடுத்த 25 ஆண்டுகளுக்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையை இதற்கு அர்ப்பணிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

அடுத்த 25 ஆண்டுகளுக்கு நம் நாட்டின் மேம்பாடு, அடிமை மனப்பான்மையை களைதல், பாரம்பரியம் குறித்த பெருமை, ஒருமைப்பாடு, குடிமகனின் கடமைகளை செய்தல் ஆகிய ஐந்து தீர்மானங்களை செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வேற்றுமையில் ஒற்றுமை என்ற தன்மைகுறித்து பெருமிதம் கொள்ள வேண்டிய தருணம் இது என்று கூறிய அவர் இந்தியாவின் வளர்ச்சிக்கு சமத்துவமே அடிப்படை என்றும், நாட்டிற்கே முன்னுரிமை என்ற தாரக மந்திரத்துடன் மக்கள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

அதேபோல் மகளிரின் சக்தி இந்தியாவின் வளர்ச்சிக்கு தூணாக அமைந்ததாக குறிப்பிட்ட பிரதமர் அவர்களது முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

வாய்ஸ்

சுய சார்பு பாரதம், டிஜிட்டல் இந்தியா இந்தியாவில் தயாரிப்போம் போன்றவை முன்னெடுத்து செல்வது குறித்து பெருமிதம் தெரிவித்த அவர் எரிசக்தி துறையில் நாடு சுயசார்பை எட்ட வேண்டும் என்றார்.

விண்வெளி, ட்ரோன், இயற்கை வேளாண்மை என இந்தியா பல்வேறு துறைகளில் முன்னேறிவருவது குறித்து அவர் பெருமிதம் தெரிவித்தார்.

ஊழல் மற்றும் வாரிசு அரசியலுக்கு எதிராக அனைவரும் ஒருங்கிணைந்து போராட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

கடந்த 8 ஆண்டுகளில் ஆதார், நேரடி பண பரிமாற்றம், கைபேசிகள் போன்ற டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மூலம் இரண்டு லட்சம் கோடி கருப்பு பணம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், ஊழலை பரப்பியவர்களை தண்டிக்க சமுதாயம் இணைய வேண்டியது அவசியம் என்றும் கூறினார்.

ஊழல்வாதிகளை தண்டிக்கும் மனப்பான்மை வளர வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

நாட்டின் வளர்ச்சிக்காக சேவையாற்றுபவர்களுக்கும் திறமையோடு பணியாற்றி நாட்டின் வளர்ச்சிக்காக செயல்படுவோருக்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

புதிய இந்தியாவின் அடிப்படை, திறமை என்று கூறிய பிரதமர் சர்வதேச விளையாட்டுகளில் இந்தியாவின் அபரா திறன்கள் மிளிர்ந்தாகவும் அத்தகைய திறன்களுக்கு ஊக்கம் வழங்கப்பட்டு மேம்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்.

முன்னதாக புதுதில்லி ராஜ்கட்டில் மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் பிரதமர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

**********

குடியரசுத்தலைவர்

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு 76ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி தலைநகர் டெல்லியில் உள்ள போர் நினைவு சின்னத்தில் நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினார்.

தியாகிகளின் நினைவை போற்றும் வகையில் மலர்வளையம் வைத்து அவர் மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங்,

பாதுகாப்பு இணை அமைச்சர் திரு.அஜய்பத்,

ராணுவ தலைவர் ஜெனரல் மனோஜ் பாண்டே

கடற்படை தளபதி அட்மிரல் ஆர்.ஹரிகுமார்.

விமான படை தளபதி ஏர்.சீப் மார்ஷல் வி.ஆர்.சவுத்ரி உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

**********

சுதந்திர தினம்

நாட்டின் அனைத்து மத்திய மாநில அரசு அலுவலகங்கள், பொதுத்துறை தனியார் நிறுவனங்களில் இன்று தேசிய கொடி ஏற்றப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

புதுதில்லி அகில இந்திய வானொலி வளாகத்தில் செய்தி பிரிவு தலைமை இயக்குனர் திரு.வேணுதர் ரெட்டி தேசிய கொடியை ஏற்றிவைத்தார்.

திருச்சி அகில இந்திய வானொலி உட்பட அனைத்து வானொலி நிலையங்களில் தேசிய கொடி ஏற்றப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

**********

முதலமைச்சர் - சுதந்திரதினம்

சென்னை கோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தேசிய கொடியை இன்று ஏற்றிவைத்து காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

**Music**

7 படைபிரிவுகளின் அலங்கார அணிவகுப்பையும் அவர் பார்வையிட்டார்.

இதனை தொடர்ந்து உரையாற்றிய முதலமைச்சர் எண்ணற்ற தியாகிகளின் தன்னலமற்ற தியாகத்தால் பெற்ற விடுதலை இது என்று குறிப்பிட்டார்.

சுதந்திர போராட்ட வீரர்கள் பலரை தமிழ்நாடு பெற்றிருந்தது என்று எடுத்துரைத்த முதலமைச்சர் விடுதலை போராட்ட தியாகிகள் அனைவருக்கும் இத்தருணத்தில் வீர வணக்கம் செலுத்துவதாக கூறினார்.

வாய்ஸ்

தொடர்ந்து பேசிய முதலமைச்சர் தமிழ்நாட்டில் அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி 3 சதவிகிதம் உயர்த்தப்படுவதாக குறிப்பிட்டார்.

வாய்ஸ்

விடுதலை போராட்ட வீரர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும்,

தியாகிகளின் குடும்ப ஓய்வூதியம் 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்தார்.

தொடர்ந்து நடப்பாண்டிற்கான நல் ஆளுமை விருதுகளையும் காவல் பதக்கங்களையும் முதலமைச்சர் வழங்கினார்.

சுதந்திரபோராட்டத்தில் பங்கேற்றுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான திரு.ஆர்.நல்லக்கண்ணுக்கு தகைசால் தமிழர் விருதை இன்று வழங்கி அவர் கவுரவித்தார்.

துணிவு சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது நாகை மாவட்டம் கீழ் வேளூரை சேர்ந்த எழிலரசிக்கும்,

அப்துல் கலாம் விருது பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியின் ஆய்வு நிறுவன இயக்குனர் முனைவர் ச.இஞ்ஞாசி முத்துவிற்கும், வழங்கப்பட்டது.

மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பிற்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.விசாகனுக்கும்

நீர்நிலைகளை மீட்டு புனரமைத்தலுக்கு சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மதுசூதன் ரெட்டிக்கும் முதலமைச்சர் நல் ஆளுமை விருதுகளை வழங்கினார்.

சிறந்த மாநகராட்சிக்கான விருது சேலத்திற்கும்

சிறந்த நகராட்சிக்கான விருது ஸ்ரீவில்லிபுத்தூர், குடியாத்தம், தென்காசிக்கும்,

சிறந்த பேரூராட்சிகளுக்கான விருது கருங்குழி, கன்னியாகுமரி சோழவந்தானுக்கும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து சென்னை எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தியடிகளின் திருவுருவ சிலையை முதலமைச்சர் திறந்துவைத்தார்.

விடுதலை போரில் தமிழ்நாடு கண்காட்சியை திறந்துவைத்து முதலமைச்சர் பார்வையிட்டார்.

**********

சுதந்திர தினம் மாவட்டங்கள்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் 76 ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்கள் இன்று வெகு சிறப்பாக நடைபெற்றன.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தேசிய கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்று தியாகிகளுக்கு நல திட்ட உதவிகளை வழங்கி கவுரவித்தனர்.

திருச்சி ஆயுதபடை மைதானத்தில் ஆட்சித்தலைவர் திரு.பிரதீப் குமார் தேசிய கொடியை ஏற்றிவைத்து சிறப்பாக செயலாற்றிய 318 பேருக்கு துறை வாரியான பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

சிவகங்கையில் ஒன்றரை கோடி ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மதுசூதன் ரெட்டி இன்று வழங்கினார்.

நாமக்கல்லில் ஆட்சித்தலைவர் திருமதி ஸ்ரேயாசிங்,

விழுப்புரத்தில் ஆட்சித்தலைவர் திரு.மோகன்,

வேலூரில் ஆட்சித்தலைவர் திரு.குமாரவேல் பாண்டியன் தேசிய கொடியை ஏற்றிவைத்தனர்.

மதுரையில் ஆட்சித்தலைவர் திரு.அனீஷ் சேகர்,

காஞ்சிபுரத்தில் டாக்டர் மா.ஆர்த்தி,

தேனியில் ஆட்சித்தலைவர் திரு.முரளிதரன்

கோவையில் ஆட்சித்தலைவர் திரு.சமீரன்

திருப்பூரில் ஆட்சித்தலைவர் திரு.வினித்,

கன்னியாகுமரியில் ஆட்சித்தலைவர் திரு.அரவிந்த் தேசிய கொடியை ஏற்றிவைத்து தியாகிகளை இன்று கவுரவித்தனர்.

நீலகிரி மாவட்டத்தில் கன மழை ஓய்ந்து இதமான பருவக்காற்று நிலவும் சூழலில் எழுச்சிமிகு சுதந்திர விழாவில் ஆட்சித்தலைவர் திரு.எஸ்.பி.அம்ரித் தேசிய கொடியை ஏற்றிவைத்தார்.

அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சித்தலைவர்கள் தேசிய கொடியை ஏற்றிவைத்து காவல்துறையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டதோடு நல திட்ட உதவிகளை வழங்கியதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாகை மாவட்டம் நாகூர் பட்டிணச்சேரி பகுதியை சேர்ந்த மீனவர்கள் 20க்கும் மேற்பட்ட படகுகளில் இன்று கடலுக்குள் சென்று 25 அடி உயர கொடி கம்பத்தை மிதவை மூலம் மிதக்க செய்து அதனை நங்கூரமிட்டு தேசிய கொடியை ஏற்றி பறக்கவைத்தனர்.

மீனவர்கள் அனைவரும் சேர்ந்து நடுக்கடலில் வந்தேமாதரம் என்று முழக்கமிட்டு தேசப்பற்றை வெளிப்படுத்தினர்.

***********

கிராமசபைக்கூட்டம்

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி தமிழ்நாடு முழுவதும் இன்று கிராமசபை கூட்டங்கள் நடைபெறுகின்றன.

தஞ்சை அம்மாபேட்டை ஒன்றியம் கீழ்கோவில்பத்து ஊராட்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் முன்னிலையில் கிராம சபைக்கூட்டம் நடைபெறுகிறது.

முன்னதாக தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் ஒன்றியம் தேனாம்படுகை ஊராட்சியில் இன்று நடைபெறும் சமபந்தி போஜனத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பங்கேற்றுள்ளார்.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

***********